# மதுரை ஹிண்டு பெர்மனெண்டு நிதி லிமிடெட்

*பதிவு அலுவலகம்* : **51-52,** மேலக் கோபுரத் தெரு, மதுரை **- 625 001.**

போன்: **0452-4377049, 87549 55645**

**CIN : U65991TN1918PLC001601 GST No : 33AABCT1316L1ZL**

**website: www.tmhpf.com, E-mail: fundoffice@tmhpf.com**


## கம்பெனிச்சட்டம் 2013-ன் பிரிவு 160(2) விதிகளின்படி அறிக்கை

மதுரை, மேலக்கோபுரத்தெரு, 51-52, கதவிலக்கமிட்ட நிதியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் 2025-ம் வருடம், **செப்டம்பர் மாதம் 24ம் தேதி, புதன்கிழமை, காலை 10.00 மணிக்கு 131-வது வருடாந்திர மகாசபைக்கூட்டத்தில்** நடைபெறவிருக்கும் மகாசபைக்கூட்டத்தில் நிதியின் மெம்பர்கள்

| | |
|---|---|
| **1. திருமதி.R. மகேஸ்வரி,** | **DIN: 11250876** |
| **2. திரு.R. ராஜ்குமார்,**B.E., M.B.A., | **DIN: 11250896** |
| **3. திரு.D.பாஸ்கரன்** B.A., | **DIN: 11214365** |

ஆகியோர்கள் தங்களை மேற்படி கம்பெனியின் இயக்குநர்களாக பதவி நியமனம் செய்வதற்காக கம்பெனிச்சட்டம் 2013ன் பிரிவு 160(1)–க்கு இணங்க விருப்பம் தெரிவித்து அறிக்கை கொடுத்துள்ளார்கள் என்ற விபரம் நிதியின் மெம்பர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்படி மகாசபைக்கூட்டத்தில் சுழல் முறையில் விலகிக் கொள்ளும் இயக்குநர்கள்

| | |
|---|---|
| **1. திரு.S.ஜெயகாந்தன்** M.S.,(I.T&M) | **DIN: 02665320** |
| **2. திருமதி.K.தமிழ்செல்வி** | **DIN: 10280759** |

ஆகியோர்கள் நிதியின் இயக்குநர்களாக மறுநியமனம் பெறத்தகுதி உள்ளவர்கள் என்றும் மேற்படியார்கள் கம்பெனிச்சட்டம் 2013–ன் பிரிவு 152–க்கு இணங்க மறு நியமனம் கோருகிறார்கள் என்ற விபரமும் நிதியின் மெம்பர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மேலும் இதனால் ஏற்பட்ட 4 (நான்கு) காலியிடங்களுக்கு 5 (ஐந்து) வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 4 (நான்கு) காலியிடங்களை நிரப்பும் நோக்கத்தில், உறுப்பினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் முன்மொழியப்படும் 5 (ஐந்து) வேட்பாளர்களில் 4 (நான்கு) வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆண்டு பொதுக்கூட்டத்தில் நேரடியாக நடைபெறும் வாக்கெடுப்பு செயல்முறையை நேர்மையாகவும், வெளிப்படையாகவும் சரிபார்க்க, இயக்குநர் குழு திரு.தினேஷ்குமார்.,P.LL.M.,(Constitutional Law) வழக்கறிஞர் அவர்களை தேர்தல் அதிகாரியாக நியமித்துள்ளது.

| | |
|---|---|
| **தேர்தல் நாள்** | **: 24.09.2025 புதன்கிழமை** |
| **தேர்தல் நடைபெறும் நேரம்** | **: பகல் 11.00 மணிமுதல் 12.30மணி வரை** |

பங்குதாரர்கள் வாக்களிக்க வரும்பொழுது அடையாள ஆவணமாக 1.நிதியின் பங்குச்சான்றிதழ் 2.நிதியின் பாஸ்புக் 3.ஆதார் அட்டை 4.ஓட்டுநர் உரிமம் 5.இந்திய வாக்காளர் அடையாள அட்டை 6.பாஸ்போர்ட் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு அடையாள ஆவணத்தை எடுத்து வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட அலுவல்களின் விபரங்கள் அனைத்தையும் நிதியின் பதிவு அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களின் உள்ள அறிவிப்பு பலகைகளின் பார்வைக்கு வைக்கப்படும்.

இதன்மூலம் மேற்படி விபரங்கள் அனைத்தையும் கம்பெனிச்சட்டம் 2013–ன் பிரிவு 160(2) விதிகளின்படி நிதியின் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

இயக்குநர்கள் குழு உத்திரவுப்படி,

(ஒப்பம்) திரு. **S. ஜெயகாந்தன்** M.S.,(I.T&M)

சேர்மன்

DIN: 02665320

இடம் : மதுரை

தேதி : **13.09.2025**